**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு**
**GWOP No. 23/2022**

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாகுல் அமீது | வயது | : | 44/2026 |
| த/பெ. | : | அப்துல் ஜலீல் | தொழில் | : | போட்டோகிராபர் |
| கிராமம் | : | ஈரோடு | தாலுகா | : | ஈரோடு |
| மாவட்டம் | | ஈரோடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 10.03.2026

**மனுதாரர் தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை**

நான் இந்த அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கு சமரச மையம் முன்பாக அனுப்பப்பட்டு MF No.1359/2025 ஆக சமரச மையம் முன்பு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே ஈரோடு சமரச மையத்தில் வைத்து சமரசம் நடைபெற்று எங்களுக்கிடையே 28.01.2026ம் தேதியில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த சமரச உடன்படிக்கையில் கூறியுள்ள நிபந்தனைகளை தெரிந்து கொண்டேன். அதில் நான் மனப்பூர்வமாக கையொப்பம் இட்டுள்ளேன். கடந்த 12.11.2006ம் தேதி எனக்கும், எதிர்மனுதாரர் ஷிபாவுக்கும் இடையே திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பயனாக எங்களுக்கு 03.09.2009ம் தேதி முகமது காசிப் என்ற ஆண் குழந்தையும், 07.08.2012ம் தேதி சனாபாத்திமா என்ற பெண் குழந்தையும் பிறந்தது. பின்னர் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் இருந்ததால் எங்களுக்கு 22.11.2020ம் தேதி சேலம், சூரமங்கலம், நூருல் இஸ்லாமத் பள்ளிவாசலில் நான் மனு அளித்ததன் பேரில் என்னையும், எதிர்மனுதாரரையும் மேற்படி பஞ்சாயத்து குழு விசாரணை மேற்கொண்டதில் 24.11.2020ம் தேதியில் எதிர்மனுதாரர் என்னை குலா மூலம் விவாகரத்து செய்து விட்டார். விவாகரத்து அளிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறி எதிர்மனுதாரருக்கு மணவிலக்கு அளித்துவிட்டேன். பின்னிட்டு 2022ம் வருடம் எனது மகன் காசிப்பிற்கு பாதுகாவலராக நியமனம் செய்து என் வசமே மைனர் முகமது காசிப்பை ஒப்படைக்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இந்நிலையில் மேற்படி மனுவை நான் மேற்கொண்டு நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என்பதால் இம்மனுவினை திரும்ப பெற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் தற்போதுள்ள அசல் மனுவில் உள்ள வழக்கு மூலத்திலும், பின்வரும் காலத்தில் வரும் சூழ்நிலையை வைத்து மீண்டும் வழக்கு தொடரும் உரிமையை நிலை நிறுத்திக் கொண்டு, இம்மனுவினை திரும்ப பெற்றுக் கொள்கிறேன். ஆகவே மனுவினை திரும்ப பெற்றுக் கொள்வதற்கு நியாயமாயும், அவசியமாயும் உள்ளது. மேற்கூறிய நிபந்தனைக்குட்பட்டு இந்த வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ள எனது தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.03.10 17:33:28 +0530

Principal District and Sessions Judge,
Erode.

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு**
**GWOP No. 23/2022**

Deposition of Witness : RW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஷிபா | வயது | : | 38/2026 |
| த/பெ. | : | அன்வர் அலீ | தொழில் | : | பார்மசியில் வேலை |
| கிராமம் | : | B.P. அக்ரஹாரம் | தாலுகா | : | ஈரோடு |
| மாவட்டம் | | ஈரோடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 10.03.2026

**எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை**

நான் இந்த அசல் மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். இந்த வழக்கு சமரச மையம் முன்பாக அனுப்பப்பட்டு MF No.1359/2025 ஆக சமரச மையம் முன்பு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எனக்கும், மனுதாரருக்கும் இடையே ஈரோடு சமரச மையத்தில் வைத்து சமரசம் நடைபெற்று எங்களுக்கிடையே 28.01.2026ம் தேதியில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த சமரச உடன்படிக்கையில் கூறியுள்ள நிபந்தனைகளை தெரிந்து கொண்டேன். அதில் நான் மனப்பூர்வமாக கையொப்பம் இட்டுள்ளேன். கடந்த 12.11.2006ம் தேதி எனக்கும், மனுதாரர் சாகுல் அமீதுவிற்கும் இடையே திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பயனாக எங்களுக்கு 03.09.2009ம் தேதி முகமது காசிப் என்ற ஆண் குழந்தையும், 07.08.2012ம் தேதி சனாபாத்திமா என்ற பெண் குழந்தையும் பிறந்தது. பின்னர் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் இருந்ததால் எங்களுக்கு 22.11.2020ம் தேதி சேலம், சூரமங்கலம், நூருல் இஸ்லாமத் பள்ளிவாசலில் மனுதாரர் மனு அளித்ததன் பேரில் என்னையும், மனுதாரரையும் மேற்படி பஞ்சாயத்து குழு விசாரணை மேற்கொண்டதில் 24.11.2020ம் தேதியில் நான் மனுதாரரை குலா மூலம் விவாகரத்து செய்து விட்டேன். இந்நிலையில் மேற்படி மனுவை மனுதாரர் மேற்கொண்டு நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என்பதால் இம்மனுவினை திரும்ப பெற்றுக் கொள்கிறார். எதிர்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் தற்போதுள்ள அசல் மனுவில் உள்ள வழக்கு மூலத்திலும், பின்வரும் காலத்தில் வரும் சூழ்நிலையை வைத்து மீண்டும் வழக்கு தொடரும் உரிமையை மனுதாரர் நிலை நிறுத்திக் கொண்டு, இம்மனுவினை திரும்ப பெற்றுக் கொள்ள சம்மதிக்கிறேன். மேலும் எனது ரேசன் கார்டில் எனது இரு குழந்தைகளின் பெயரை நீக்கம் செய்து கொடுக்கவும் சம்மதிக்கிறேன். ஆகவே மனுவினை திரும்ப பெற்றுக் கொள்வதற்கு நியாயமாயும், அவசியமாயும் உள்ளது. மேற்கூறிய நிபந்தனைக்குட்பட்டு இந்த வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ள எனது தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S
Digitally signed by SAMEENA S
Date: 2026.03.10 17:33:38 +0530

Principal District and Sessions Judge,
Erode.